**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.25/15**

2023-ம் ஆண்டு ஜூன் திங்கள் 14 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.ராதா, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.ராதா, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க.பெ.ரவி |
| கிராமம் | - நெடும்பிறை |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

14.06.2023
வா.சா.1.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் ஏற்கனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாரில் அசல் வழக்கு எண். 217/15 என்ற வழக்கினை எனது மைனர் பிரவின்குமார் சார்பாக தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கில் பிரதிவாதி மாதா மாதம் ரூ.5000/-ம் மைனர் பிரவின்குமாருக்கு ஜீவனாம்சமாக செலுத்தவேண்டும் என்று பிரதிவாதியின் சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டியும் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் தற்போது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிராது 1வது பத்தி முதல் 9பத்தி வரையிலான விவரங்களைதான் அவ்வழக்கிலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

2) மேற்படி இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனது மைனர் மகனுக்கு தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். பிரதிவாதி மைனர் பிரவின்குமார் தனக்கு பிறக்கவில்லை என்றும், அவருக்கும் எனக்கும் எந்த வகையிலும் தொடர்பு இல்லை என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி ரவி எனக்கு அறிமுகம் ஆவதற்கு முன்பு ஆடிட்டராக பணிபுரிந்தார். என் அக்கா கணவர் வீரராகவன் நடத்தி வந்த கணினி மையத்தில் நான் பணிபுரிந்தேன். மேற்படி கணினி மையம் கிருஷ்ண வரதராவ் திருமண மண்டபத்தில் தேரடி வீதியில் அமைந்துள்ளது. நான் எனது அக்கா வீட்டில் தங்கி வேலை செய்து வந்தேன். நான் வேலைசெய்துவிட்டு காஞ்சிபுரத்தில் இருந்து நெடும்பிறை கிராமத்திற்கு தினமும் வந்துவிடுவேன்.

3) 2007ம் வருடம் கடைசி மாதம் வேலைக்கு சேர்ந்தேன் 9 மாதங்கள் வேலை செய்திருப்பேன். பிரதிவாதி என்னை கடத்தி சென்றுவிட்டதாக நான் மோரணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். 2010ம் வருடம் புகார் அளித்திருப்பேன். அந்த புகாருக்காக நான் வழக்கு தாக்கல் செய்திருந்தேனா என்று எனக்கு நினைவு இல்லை. நான் மோரணம் காவல் நிலையத்தில் அளித்திருந்த புகாரின்பேரில் பிரதிவாதியை விசாரணைக்கு அழைத்தார்கள் அவர் விசாரணைக்க வரவில்லை. அதன் பிறகு நான் அளித்த புகாரை சிவகாஞ்சி காவல் நிலையத்திற்கு மாற்றிவிட்டார்கள். மோரணம் காவல் நிலையத்திற்கு சென்றுதான் புகார் சிவகாஞ்சி காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டேன். மேற்படி 2 காவல் நிலையத்திலும் எனது புகாரின் அடிப்படையில் என்னை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை.

4) சிவகாஞ்சி காவல் நிலையத்தில் நானே என்னை காணவில்லை என்று புகார் அளித்திருப்பதால் அந்த புகாரை ஏற்க இயலாது என்று எனக்கு அறிவுரை வழங்கி அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் வீட்டில் உள்ளவர்கள் தான் நான் காணவில்லை என்று புகார் அளித்தார்கள். அதன் பிறகு காவல் நிலையத்தார் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் செய்யாரில் எனது வழக்கறிஞரை வந்து சந்தித்தேன். வழக்கறிஞரின் அறிவுறுத்தலின்பேரில் மீண்டும் பிரதிவாதிமீது நான் புகார் அளித்தேன். மேற்படி மோரணம் காவல்நிலையம் மற்றும் சிவகாஞ்சி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பின்னர் நான் செய்யாரில் புகார் அளிக்கும்போது 4 மாத காலங்கள் ஆகிவிட்டது.

5) நான் மீண்டும மோரணம் காவல் நிலையத்திலேயே 2வது முறையாக பிரதிவாதிமீது புகார் அளித்தேன் என்றால் பிரதிவாதி விசாரணைக்கு வராததால் மீண்டும் புகார் அளித்தேன். எனது மகன் பிரவின்குமார் என்பதற்கான ஆதாரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எந்த ஒரு ஆவணத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்திலோ, மனுவுடனும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் அந்த ஆவணங்கள் குறித்து எனது பிராதிலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி மைனர் பிரவின்குமார் வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் பிறந்தார். அவரது பிறப்பு சான்றிதழையோ அல்லது மருத்துவ ஆவணத்தையோ நான் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6) எனது கணவர் பிரதிவாதிதான் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் மனு போட்டுள்ளேன். நான் சொல்வதுபோல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இன்றளவில் திருமணம் ஏதும் நடக்கவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிமீது இருக்கும் ஒருதலைபக்க விருப்பத்தின்பேரில் பிரதிவாதியை அச்சுருத்தி திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்படி நான் மைனர் பிரவின்குமார் பிரதிவாதியின் மகன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. டி.என்.ஏ மருத்துவ பரிசோதனை அறிக்கை உள்ளது. திருவண்ணாமலை குற்றவியல் நீதிமன்றத்தில் பிரதிவாதிமீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் டி.என்.ஏ மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்ட பின்னரும் 4 ஆண்டு காலமாக விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரணைக்கு சென்றுகொண்டுதான் இருக்கிறேன். அந்த குற்ற வழக்கில் பிரதிவாதியை நான் அலைகழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இதுநாள்வரை நான் விசாரணையை மேற்கொள்ளாமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7) 01.09.2022 தேதியில் இருந்து இம்மாதம் 2ம் தேதி வந்த வாய்தாவரையில் நான் என்னை விசாரணைக்கு உட்படுத்திக்கொள்ளாமல் பிரதிவாதியை அலைகழித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள டி.என்.ஏ அறிக்கை மீதான விசாரணை குறித்து நான் சாட்சியம் அளிக்க வேண்டிவரும் என்ற காரணத்தால் நான் அந்த வழக்கில் விசாரணையை துவங்காமல் உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விசாரணை எந்த எந்த தேதி வருகிறது என்பது குறித்து கணினி மூலம் தெரிந்துகொள்ள

எனக்கு தெரியும். பிரவின்குமார் எனது மகன் என்று நிரூபனம் செய்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யாமல் வாதி பிரவின்குமாரின் தந்தையென விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

8) நான் மோரணம் காவல் நிலையத்தில் முதலில் புகார் கொடுத்தபோது என்னை காணவில்லை என்றும் புகார் கொடுத்தேன். பின்னர் 3 மாதம் கழித்து பிரதிவாதி என்னை கற்பழித்துவிட்டதாக புகார் அளித்தேன் என்று சொன்னால் நான் காணவில்லை என்று என் வீட்டில் புகாார் அளித்தார்கள் பின்னர் நான் பிரதிவாதி என்னை காதலிப்பதாக கூறி கற்பழித்துவிட்டதாக புகார் அளித்தேன். 2008ம் வருடம்வரை நான் பிரதிவாதிமீது கொடுத்த புகாரின்பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் 6 மாதம் கழித்து 2009ம் வருடம் 2ம் மாதம் மகளிர் காவல்நிலையத்தில் மீண்டும் பிரதிவாதிமீது புகார் அளித்தேன். நான் வேலைக்கு போனபிறகுதான் பிரதிவாதி எனக்கு அறிமுகம் ஆனார். அதற்கு முன்பு இல்லை. பிரதிவாதி எனக்கு அறிமுகம் ஆனபோது அரசாங்க வேலையில்தான் இருந்தார். நான் சொல்வது பொய் என்றும், பிரதிவாதி எனக்கு அறிமுகமானபோது வேலையில் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எனவே எனது தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னை கற்பழித்துவிட்டார் என்றும், எனது கிராமமான நெடும்பிறையில் என்னை சீரழித்துவிட்டார் என்று நான் பிரதிவாதிமீது கொடுத்திருக்கும் புகாருக்காகவும், இந்த வழக்கிற்காகவும் பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வாதி பிரவின்குமார் பிரதிவாதிக்கு பிறந்திருந்தால் குற்ற வழக்கில் விரைந்து விசாரித்து எனக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

9) மேற்படி குற்ற வழக்கில் நான் முறையாக ஆஜராகி சாட்சியம் அளிப்பதிலிருந்து தவிர்தது வருகிறேன் என்றும் என் தரப்பில் டி.என்.ஏ பரிசோதனை அறிக்கை குறித்து சாட்சியம்

எதுவும் விசாரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண். 217/15ல் தீர்ப்பு நகலை படித்து விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு நினைவு இல்லை. அந்த வழக்கில் நான் மேல்முறையீடு செய்துள்ளேன். அந்த வழக்கில் என் மகனின் தந்தை பிரதிவாதிதான் என்றும் என் மகனுக்கு ஜீவனாம்சம் அளிக்கவேண்டும் என்றும் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு பிரதிவாதிக்கு பிறந்த மகன்தான் பிரவின்குமார் என்று நான் நிரூபனம் செய்யாததால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. முன் வழக்கு தீர்ப்பு விவரங்கள் மற்றும் சங்கதிகளை மறைத்துவிட்டு நான் இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.